# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.C.C.125/2025**

| Deposition of Name | கமலா தேவி | Prosecution | LW-1 as PW1. |
|---|---|---|---|
| Father Name | க/பெ.மணி | Defence | |
| முகவரி | கற்பள்ளம் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 60/2025 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**19.02.2026.**

**எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரில் வசித்து கொள்ளிடத்தில் உள்ள ஆயாம்மாவாக வேலை செய்து விட்டு தற்போது பணி ஓய்வில் உள்ளேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது பக்கத்துவீட்டுக்காரர்கள் ஆவார். அவர்கள் குடும்பத்திற்கும் எங்கள் குடும்பத்திற்கும் வேலி சம்பந்தமான மனை பிரச்சனை இருக்கு. 08.12.2024ம் தேதி அன்று காலை எதிரிகள் குடும்பத்திற்கும் எங்கள் குடும்பத்திற்கும் குப்பை கொட்டுவது தொடர்பாக நடந்த சண்டையை நான் காவல் நிலையம் சென்று புகார் செய்து விட்டு வீட்டில் இருந்தேன். அது சம்பந்தமாக போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை செய்து விட்டு சென்றார்கள். அன்று மாலை 06.00 மணியளவில் எதிரி ரத்தினவேல் குடித்து விட்டு வந்து எனது மருமகள் ரசியாவிடம் தகராறு செய்தார். நான் அதற்கு உங்கள் மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருக்கிறேன். அதற்குள் மறுபடியும் ஏன் இவ்வாறு சண்டைக்கு வருகிறீர்கள் என்று கேட்டுக்கொண்டிருந்தேன். அங்கிருந்த எதிரி விஜயபாலன் அங்கு கிடந்த பச்சை மட்டையால் என் தலையில் பலமாக அடித்து விட்டார். எனது வாய் மற்றும் மூக்கு வழியாக ரத்தம் வந்தது. நான் மயக்க நிலையில் சென்றுவிட்டேன். என்னை அங்கிருந்தவர்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள். சிகிச்சையில்

இருந்தபோது போலிசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் வாங்கி கொண்டார்கள். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள விவரங்களை போலிசார் எனக்கு படித்து காண்பித்தார்கள். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள். வருடா வருடம் இதேபோலவே எதிரிகள் பிரச்சனை செய்து வருகிறார்கள்.

**எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகததால் குறுக்கு விசாரணை தன்னிச்சையாக முடித்து வைக்கப்பட்டது.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.C.C.125/2025**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | ரசியா | Prosecution | LW-4 as PW2. |
| Father Name | க/பெ.செந்தில்குமார் | Defence | |
| முகவரி | கற்பள்ளம் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 36/2025 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**19.02.2026.**

**எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மாமியார் ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும், அவர்கள் எனது பக்கத்து வீட்டை சேர்ந்தவர்கள். எனது கணவர் கேரளாவில் தங்கி கூலி வேலை செய்து வருகிறார். எனக்கு இரண்டு மகள்கள் உள்ளனர். கடந்த 2024ம் ஆண்டு தேதி மாதம் நினைவில் இல்லை. ஒரு நாள் மாலை 06.00 மணியளவில் விஜயபாலன் மனைவி சுசிகுமாரி என்பவர் எங்களுக்கு சொந்தமான மனையில் குப்பை கொட்டினார். அதற்கு நான் எதற்காக நீ எங்கள் மனையில் குப்பை கொட்டுகிறாய் என்று கேட்டேன். எங்கள் இருவருக்குள்ளும் வாக்குவாதம் ஏற்பட்டது. அப்போது வந்த விஜயபாலன் என்னை தகாத வார்த்தைகளால் திட்டி என்னிடம் சண்டை இழுத்தார். அதனை கேட்க வந்த எனது மாமியாரை கீழே கிடந்த பச்சை மட்டையால் தலையில் தாக்கிவிட்டார். எதிரி ரத்தினவேல் என்னையும், எனது மாமியாரையும் மிகவும் தரக்குறைவாக திட்டினார். எனது மாமியார் மயக்க நிலைக்கு சென்றுவிட்டதால் அவரை அழைத்துக்கொண்டு 108 ஆம்புலன்சு மூலம் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். தினமும் இரவு குடித்து விட்டு வந்து எதிரி விஜயபாலன் எங்களை இன்னமும் தரக்குறைவாக தகாத வார்த்தைகளால் பேசி வருகிறார். போலிசார் என்னை

விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகததால் குறுக்கு விசாரணை தன்னிச்சையாக முடித்து வைக்கப்பட்டது.**